அமைதியான காட்டை
நிலைகுலைய வைத்தது ஒரு தீப்பொறி!
தெளிவான வானிலிருந்து
வெளிப்பட்டதொரு மின்னல்...

---

நிலையான கடலில் ஓர்
நிலையில்லா கலக்கம்!
நிஜமான உன்னுள்
நிழலான என் உருவம்!

---

வாசத் தோட்டத்தின் மணத்தில்
மறக்கப் பட்ட உதிரிப் பூக்கள்;
என் காலத்தின் பொன் குவியலில்
மறைந்த அந்த சில நாட்கள்!

---

வசந்த கால பந்தம்
மதி உதிரக் கண்ணீர்;
சில நொடி மகிழ்ச்சிக்காக
பல பிறவிப் பிரிவு!